CC BY ND

This article is published under the Creative Commons CC-BY-ND License (http://creativecommons.org/licenses/

# Songs of Silappathikaram in the field of music- a Research
# இசைத்துறையில் சிலப்பதிகார பாடல்கள் - ஓர் ஆய்வு

**திருமதி. பிரசாந்தி இளங்கோ**
*விரிவுரையாளர், நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.*
*Correspondence: ilangop@esn.ac.lk*
*Submitted: 30.05.2022 Revised: 17.11.2022 Accepted: 15.12.2022*

## Abstract

Several literatures constantly emerged in past decades. Nevertheless, not all the literatures survive up to the present moment. Incomparably, Silappathikaram is regarded as the surviving literature. It is the foremost of the five great epics in Tamil. The epic was written by the poet Ilango Adigal in 2nd century B.C. It is considered as the treasure trove for delineating the elements of *Iyal* (poetry), *Isai* (music), *Natakam* (drama). Undoubtedly, the intricacies and the techniques of music in Silappathikaram was the great inspiration for the composers of later years. Silappathikaram songs have been widely used in the field of music. Yet, it has not been documented as a whole. The foremost concern of this research is to comprehend the use of Silappathikaram songs as a whole. Therefore**, the main objective** of this research is to trace the influence and the use of Silappathikaram songs in the field of music. **The study utilized exploratory method and the primary data** is gathered through the songs which are emerged in the later years. **The research reveals** that, Silappathikaram songs have been used as film songs, *ragamalika* (the composition of different ragas) in musical concerts, and dance-drama songs. It has been found that, *Navarasa* (Nine emotions) songs of Silappathikaram have been researched widely and identified that the *punn* (the melodic mode used by the Tamil people in their music since ancient times) used in contemporary songs equivalently found in Silappathikaram songs.

Key words: *Punn*, *Swara* (the sound of musical note), *Ragamalika, Mettu* (a musical interval)

### ஆய்வுச் சுருக்கம்

காலம் தோறும் எத்தனையோ இலக்கியங்கள் தோன்றியிருந்தாலும் அவை எல்லாமே காலத்தால் வாழ்ந்துவிடவில்லை. முத்தமிழ் காப்பியங்களில் ஒன்றாகவும், ஐம்பெரும் காப்பியங்களுள் முதன்மையானதாகவும் விளங்கும் சிலப்பதிகாரமானது இன்றுவரை காலத்தால் வாழும் இலக்கியமாக விளங்க, இயலிசை நாடகம் தொடர்பாக இளங்கோவடிகள் வழங்கியுள்ள பெறுமதிமிக்க செய்திகளே முக்கிய காரணிகளாக அமைகின்றன. கி.பி 2ம் நூற்றாண்டளவில் தோற்றம் பெற்றதாக கூறப்பட்டாலும் கி.பி 21ம் நூற்றாண்டில் கூட சீரும் சிறப்பும் குன்றா இலக்கியமாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் எடுத்தாளப்பட்டுள்ள இசைப்பாக்கள் முக்காலமும் வாழும் பெருமைக்குரியவை. கவிநயமும் கருத்தாழமும் மிக்க பாடல்களுக்கு, இளங்கோவடிகளின் கற்பனையும் எதுகை மோனைகளும் இன்னும் வளம் சேர்க்கின்றன. இவை எல்லாமே பின்வந்த இசையாசிரியர்களால் கவரப்பட்டு, இலகுவாக ஸ்வரங்கள் சேர்த்து மெட்டமைத்து பாடப்படக் காரணமாயிருந்திருக்க வேண்டும். சிலப்பதிகாரப் பாடல்கள் பிற்கால இசைத்துறையில் எங்கெங்கெல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன, செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன என்பதை அறியும் ஆய்வாகவே இவ்வாய்வு அமைகின்றது. இசைத்துறையில் பல தேவைகளுக்காக சிலப்பதிகாரப் பாடல்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் அவை அனைத்தையும் ஒரே பார்வையில் தொகுக்கும் நோக்கில் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது. சிலப்பதிகாரப் பாடல்கள் திரையிசைப் பாடல்களாகவும், இசையரங்குகளில் இராகமாலிகாவாகவும், நாட்டியநாடகப் பாடல்களாகவும், பயன்படுத்தப்பட்டுள்ளன. நவரசங்கள் நிறைந்த பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இராக தாளங்கள் சேர்க்கப்பட்டும், சமகாலப் பண்களுக்கு நிகரொத்த பண்கள் சிலப்பதிகார காலத்திலே கையாளப்பட்டிருப்பது பற்றிய ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டும், வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. ஆனாலும் இசை வரலாற்றில் சிலப்பதிகாரப் பாடல்கள் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கினறன என்பதை ஒரே பார்வையில் பார்க்கக்கூடிய தொகுப்பு இதுவரை ஆய்வு வரலாற்றில் நிரப்பப்படாத இடைவெளியாகவே காணப்படுகின்றது. இவ்வாறு இசைத்துறையில் பல தேவைகளுக்காக சிலப்பதிகாரப் பாடல்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் அவை அனைத்தையும் ஒரே பார்வையில் தேடியறியும் பின்னணியில் இவ்வாய்வினுடைய முக்கியத்துவமும் நோக்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்** - பண், ஸ்வரங்கள், இராகமாலிகா, மெட்டு

### அறிமுகம்

ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரமும் ஒன்று. காலந்தோறும் பல காப்பியங்கள் தோன்றியிருந்தாலும், காலத்தை வென்று வாழும் காப்பியங்களுள் சிலப்பதிகாரம் முக்கியமானது. அதற்கு காரணமாக அமைவது அதன் இசைக்கட்டமைப்பாகும். இளங்கோ அடிகளின் கவிநயமும், கருத்தாழம் மிக்க வரிகளும், படிப்பவர் மனதில் காதலின், பிரிவின், கோபத்தின் ரசத்தை உணரவைக்க சொற்களைத் தேடித்தேடிக் கோர்த்துள்ளார். இதனால் தான் காலத்தை வென்றும் இன்றுவரை சிலப்பதிகாரப் பாடல்கள் பயில்நிலையிலுள்ளன. இசைவரலாற்றில் காதலை, பிரிவின் துயரை, கோபத்தின் உச்சத்தை வெளிப்படுத்த எங்கெல்லாம் வெற்றிடங்கள் ஏற்பட்டதோ அவற்யையெல்லாாம் சிலப்பதிகாரப்பாடல்கள் நிரப்பியுள்ளன. கர்நாடக சங்கீதம் முதல் திரைப்படப்பாடல்கள் வரை சிலப்பதிகாரப் பாடல்கள் இன்று பயில்நிலையிலுள்ளன. இவை எங்கெங்கெல்லாம் பயன்பட்டுள்ளன. எவ்வாறு இசையாக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதை விரிவாக ஆராய்வதாகவே இவ்வாய்வு நகர்கின்றது.

### கண்டுபிடிப்பும் பெறுபேறுகளும்

முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரம் இசைபற்றிய செய்திகள் நிறைந்த ஓர் இசைக்கருவூலமாகும். புகார், மதுரை, வஞ்சி எனும் மூன்று காண்டங்களை முப்பது காதைகளாகப் பிரித்து சிலம்பின் கதையை வளர்த்துச்செல்கின்றார் இளங்கோவடிகள். இக்காவியம் முழுவதுமே பாடல்களாகப் படைக்கப்பட்டிருப்பது

இளங்கோவடிகளின் இசைப்புலமைக்கு சான்றாகும். அதே வேளை, கி.பி. 2ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கியமாகக் காணப்பட்டாலும் கி.பி. 21ம் நூற்றாண்டு வரை வாழ்கின்ற இலக்கியமாகவும் சிலப்பதிகாரம் படைக்கப்பட்டுள்ளது. பின் வந்த இசையாசிரியர்களால் பல தருணங்களிலும் பல்வேறு தேவைகளுக்காக எடுத்தாளப்பட்டு இசைப்பாக்களாகவும் இராகமாலிகாக்களாகவும் நாட்டியப் பாடல்களாகவும் பண்ணிசைத்துப் பாடப்பட்டு வந்த பெருமைக்குரியவை சிலப்பதிகாரப்பாடல்கள்.

காலத்தாலும் கவிச்சிறப்பாலும் புகழ்பெற்ற இப்பாடல்கள் பிற்கால இசைத்துறையில் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தினை எடுத்து ஆராயும் போது டாக்டர் எஸ்.இராமநாதன் அவர்கள் ஆய்ச்சியர் குரவைப்பகுதியிலிருந்து சில பாடல் பகுதிகளை எடுத்து அவற்றை மோகனம், மத்தியமாவதி, இந்தோளம், சுத்தசாவேரி. சுத்தசன்யாசி ஆகிய இராகங்களில் அமைத்து சுரதாளக் குறிப்புகளோடு சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள்" எனும் நூலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ( இராமனாதன் எஸ். 1968 ).

எம்.எம்.தண்டபாணி தேசிகர் அவர்கள் சிலப்பதிகாரப் பாடல்களுக்கு இசையமைத்து இப் பாடல்களைக் கொண்டதொரு கச்சேரியை நடத்தியதாகக் குறிப்பிடப்படுகின்றது.

எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் இசையோடு பாடியுள்ள "மடவரையை மத்தாக்கி...." எனத் தொடங்கும் பாடல்கள் (ஆய்ச்சியர் குரவை) இராகமாலிகாவாகப் பாடப்பட்டு இசைத்தட்டில் 1967ம் ஆண்டு வெளிவந்துள்ளது. இவர் தனது இசையரங்கங்களிலும் இதனைப் பாடிப் பிரபல்யப்படுத்தியுள்ளார்.

மேலும் பரதநாட்டிய கலைஞர் வைஜந்தி மாலா பாலி அவர்கள் சிலப்பதிகாரத்தில் வருகின்ற குரவைக் கூத்தினை நாட்டிய நாடகமாக அமைத்து தம்முடைய நாட்டிய நிகழ்ச்சிகளிலே அளித்துள்ளார்.

பத்மா சுப்பிரமணியம் அவர்களும் சிலப்பதிகாரத்தினை நாட்டிய நாடகமாக அமைத்து தம்முடைய நாட்டிய நிகழ்ச்சிகளிலே அளிக்கை செய்துள்ளார்.

திரைப்படங்களிலும் ஒரு சில பாடல்கள் பாடப்பட்டு வந்துள்ளன. உதாரணமாக "பூம்புகார் எனும் திரைப்படத்தில்

"மாசறு பொன்னே வலம்பரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும் பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வணிகன் பெருட மகளே
மலையிடைப் பறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அழிந்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை"

எனும் பாடல் மெட்டமைக்கப்பட்டுப் பாடப்பட்டிருப்பதைக் காணலாம்.

யாழ்நூல் எனும் நூலின் ஆசிரியரான விபுலானந்தர் சிலப்பதிகார இசையிலக்கண நுணுக்கங்களை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். அவர் செம்பாலை, பாடுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விறலிப்பாலை, மேற்செம்பாலை முதலான ஏழுபாலைகளுக்கும் இணையான தற்கால இராகங்களை குறிப்பிடுகின்றார். உதாரணமாக செம்பாலை தற்போதுள்ள ஹரிகாம்போதி இராகத்தினை ஒத்தது எனக் கூறுகின்றார்.

மேலும் சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர். எஸ். சீதா அவர்கள் சிலப்பதிகாரத்தில் ஒன்பது சுவைகளை உணர்த்தும் வகையில் அதில் ஒன்பது சுவைகளிலுள்ள பாடல் வகைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஒன்பது இராகங்களில் இசையமைத்து சுரதாளக் குறிப்புகளோடு தம்முடைய கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளார். இதனைச் சிலப்பதிகாரத்தில் ஒன்பது சுவைகள் என்னும் தலைப்பில் இசை நிகழ்ச்சியாகவும் தமிழிசை ஆராய்ச்சி ஆண்டுக் கூட்டத்தில் நிகழ்த்திக் காட்டியுள்ளார் என்றும் அதன் பாடல் பற்றிய விளக்கங்களையும் சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப்பாடல்கள்" எனும் நூலின் அதன் ஆசிரியர் அங்கயற்கண்ணி அவர்கள் குறிப்பிடுகிறார். (அங்கயற்கண்ணி.இ, 1994, பக். 13)

அப் பாடல் விபரங்கள் வருமாறு

**ஒன்பது சுவைகள் பாடல்கள்**
**இராகம் தாளம்**

01. வீதம் "மாட்டார் குழலார்....." அடாணா ஆதி
(வஞ்சினமலை)
அடி 35-42

02. நகைச்சுவை "இறைவனை நல்லாய்"
மத்தியமாவதி ஆதி
(கன்றக்குரவை அடிகள் 10,11,12,13)

03. இன்பச்சுவை "மாசாறு பொன்னை...."
குறிஞ்சி ஆதி
(மனையறம் படுத்தகாதை)
அடி 73 - 810

04. அற்புதம் "என்னேயிதென்ன" காம்போதி ஆதி
(வாழ்த்துக்கதை 9)

05. சாந்தம் "தெய்வந்தோழா" சாமா ஆதி
(கட்டுக்கதை)

06. மங்கலவாழ்த்துப் பாடல் (திங்களைப் போற்றுதும்)
பூபாளம் ஆதி

07. குற்சை கானல்வரியான்பாட வராளி ரூபகம்
(அடி 53 - 61)

08. கருணை ஞானநன்னெறி ஆகிரி ஆதி
9 அடைக்கலக்காதை 43-54

09. அச்சம் குடப்பால் உறையா புன்னகவராளி ஆதி
(ஆய்ச்சியர்குரவை 2-34)

10. கோபம் மாயங்கொன்மற்றென் ஆரபி ரூபகம்

என சிலப்பதிகாரப் பாடல்கள் பற்றிய பல நுட்பமான தகவல்களைத் தருவதாக "சிலப்பதிகாரத்தில் இசை' எனும் நூலில் அதனாசிரியரான அங்கயற்கண்ணி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இவ்வகையில் சிலப்பதிகாரப் பாடல்கள் பிற்காலத்தில் எழுந்த இசையிலக்கணுக்கெல்லாம் ஆதார இலக்கியங்களாகத் திகழ்ந்துள்ளன என்பது தெளிவு.

சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவைப் பகுதியில் இடம்பெற்ற பாடல்கள் குறிஞ்சி நில மக்கள் வாழ்வைச் சித்தரிக்கும் முறையில் அமைக்கப்பட்டுள்ளதால் இப்பாடல்கள் பின்னர் ஏற்பட்ட குறிஞ்சிப் பண்திற வகைகளுக்கு இலக்கிய ஆதாரங்களாக இருந்திருக்கக்கூடும். எனவே குன்றக்குரவைப் பாடல்களுக்கு இசையமைக்கும் போது கீழ்க்குறிப்பிடப்படும் பண்களில் இசையமைக்கலாம் என அங்கயற்கண்ணி விளக்குகின்றார். (அங்கயற்கண்ணி.இ, 1994, பக்.63)

1. நைவளம் (நட்டபாடை) - கம்பீரநாட்டை
2. அந்தாழி (அந்தாளிக்குறிஞ்சி) - சாமா
3. பழம்பஞ்சுரம் - தீரசங்காராபரணம்
4. மேகராகக் குறிஞ்சி - நீலாம்பரி
5. பழந்தக்கராகம் - சுத்த சாசேரி அல்லது ஆரபி
6. நட்டராகம் - பந்துவராளி
7. செந்திறம் - மத்தியமாவதி

செவ்வழியாழ் அல்லது முல்லைப்பெரும் பண் திறங்களில் தற்போதுள்ள இராகங்களோடு ஒப்பிடும் படியான பண்கள் விளக்கப்படுகின்றன.

1. செவ்வழிப்பண் - எதுகுலகாம் போதி
2. வேளாவளி - கௌரி மனோகரி
3. சீராகமரம் - சீகாமரம்
4. பெயர்திறம் - நவரோஜ்

திருவிசைப்பாவில் இரண்டு பாடல்களுக்குரிய பண்ணாக சாரளபாணி குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடல்கள் தற்போது ஆனந்தபைரவி ராகத்தில் பாடப்படுவதால் சாளரபாணிப் பண் ஆனந்தபைரவி ராகமாக இருக்கலாம் என்கிறார் அங்கயற்கண்ணி அவர்கள். முல்லை நிலமான காடும் காடு சார்ந்த இடத்திலுமுள்ள மக்கள் வாழ்வை இசையுடன் கூடிய தொடர்புடையதாகக் கருதலாம். சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப் பகுதியிலே இடம் பெற்றுள்ள பாடல்கள் முல்லை நில மக்களின் வாழ்வியலைச் சித்திரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதால் இப்பாடல்கள் பின்னர் ஏற்பட்ட முல்லைப் பண் திற வகைகளுக்கு இலக்கிய ஆதாரங்களாக அமைந்திருக்கும் எனவே ஆய்ச்சியர் குரவைப் பகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களுக்கு இசையமைக்கும் போது மேற்குறிப்பிட்ட பண்களைப் பயன்படுத்தலாம் என்றும் அங்கயற்கண்ணி கூறுகின்றார். (அங்கயற்கண்ணி.இ, 1994, பக். 64 )

நூற்று மூன்று பண்களின் வகைப்பாட்டில் பாலைப்பெரும்பண் திறவகைகளில் தற்போதைய இராகங்களோடு ஒப்பிடத்தகுந்த பண்கள் வருமாறு:

1. பாலைப்பண் (செம்பாலை) அரிகாம் போதி
2. சீர்கோடிகம் (நிரபதுங்கராகம்) தோடி
3. அராகம (தக்கராகம்) காம்போதி
4. நேர்த்திரம் (புறநீர்மை) பூபாளம்
5. உறுப்பு (காந்தாரபஞ்சமம்) கேதாரகௌளை
6. சொல்லி - நவரோஜ்
7. ஆசான்நிதம் - (காந்தாரம்) - நவரோஜ்

காந்தார பண் தற்காலத்து தோடி என்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளதாக மேற்படி நூலாசிரியர் கூறுகின்றார். (அங்கயற்கண்ணி.இ, 1994, பக். 64)

தமிழகத்தின் நெய்தல் நிலத்திற்குரியது யாழ் இதற்குத் திறம் கிடையாது. ஏழிசைகளைக் கொண்ட இது தாரம் எனவும் தாரப்பண் எனவும் பெயர்படும். இது மேற்செம்பாலையின் மற்றொரு பெயர். மேற்செம்பாலைக்குப் பொருத்தமான தற்கால இராகம் கல்யாணி எனவும், நடபைரவி எனவும் இருவேறு கருத்துண்டு. இந்த இராகங்களிலும் இவற்றில் பிறந்த ஜன்ய ராகங்களிலும் நெய்தல் நிலத்திற்குரிய கானல்வரிப் பாடல்களை இசையமைக்கலாம் எனவும் அங்கயற்கண்ணி கூறுகின்றார். (அங்கயற்கண்ணி.இ, 1994, பக். 65)

மருதயாழ் அல்லது மருதப்பெரும்பண் திறங்களின் வகைகளில் தற்போதுள்ள இராகங்களோடு ஒப்பிடக்கூடிய பண்கள் பின்வருமாறு,

1. மருதயாழ் - கோடிப்பாலை - கரகரப்பிரியா
2. நவிர் (தக்கேசி) - காம்போதி
3. வடுகி (இன்தளம்) - நாதநாமக்கிரியை
4. செய்திறம் (கௌசிகம்) - பைரவி
5. சீகாமரம் - நாதநாமக்கிரியை

மேற்கண்ட பண்கள் மருதநிலப் பரப்பிலுள்ள மக்கள் அதாவது, வயலும் வயல் சார்ந்த இடத்து மக்கள் இசையுடன் தொடர்புடையதாகக் கருதலாம். வாழ்த்துக் காதையில் இடம்பெற்றுள்ள வள்ளைப்பாட்டு, ஊசல்வரி போன்ற பாடல்களுக்கு இசையமைக்கும் போது நாட்டுப்புற மெட்டுக்களோடு மேற்கண்ட பண்களையும் பயன்படுத்தலாம் என்கிறார் அங்கயற்கண்ணி.இவ்வாறு சிலப்பதிகாரப் பாடல்களை பிற்காலப் பண்களுக்கு ஆதாரமாகத் திகழ்ந்திருக்கலாம் எனும் கருத்தில் பாடல்களுக்கு உரிய பண்களை இசை இலக்கண ரீதியாகக் கூறலாம்.

மேலும் மனையறம் படுத்த காதையில் "மாசறு பொன்னே வலம்புரி முத்தே" எனத் தொடங்கும் அடிகள் (73-80) கண்ணகியின் அழகை வர்ணித்து உரைப்பதாக காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. இவ்வடிகள் தற்போதைய "கீர்த்தனை" எனும் இசை உருப்படி அமைப்பைப் போன்று பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய அங்கங்களுடன் இசையமைத்துப் பாடுவதற்கு ஏற்ற வகையில் உள்ளன. எனவே இதனை இசைப் பாடலாகக் கொள்ளலாம் என்கிறார் முனைவர் இ.அங்கயற்கண்ணி. (அங்கயற்கண்ணி.இ, 1994, பக். 69).

இப்பாடல் குறிஞ்சி இராகம், ஆதி தாளத்தில் டாக்டர் எஸ். சீதா அவர்களால் இசையமைக்கப்பட்டுள்ளது. முதலிரண்டு அடிகள் பல்லவியாகவும், அடுத்த இரு அடிகள் அனுபல்லவி போன்றும் இறுதியிலுள்ள நான்கடிகளும் சரணமாகவும் வைத்து இசையமைக்கப்பட்டுள்ளது.

"பூம்புகார்" என்னும் திரைப்படத்தில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது. எம்.எஸ்.விஸ்வநாதன் இசையமைப்பில் டி.எம்.சௌந்தரராஜன் குரலில் இப்பாடல் ஒலித்துள்ளது. இப்பாடல் கோவலன் பாடுவதாக அமைந்திருந்தாலும் கண்ணகியும் அருகிலமர்ந்து அதை இரசிப்பதாக கற்பனை செய்து கொள்ளும் வகையில் பெண் குரலையும் இப்பாடலில் சேர்த்திருக்கின்றனர். இதில் பொன்னே! முத்தே! போன்ற சொற்களுக்கிடையே வார்த்தைகள் இல்லாமல் "ஏ' காரமாக இசைப்பதாக திருமதி.எஸ்.ஜானகியின் குரல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே பாடல் அமெரிக்காவின் வாசிங்டன் நகர தமிழ்சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட முத்தமிழ் விழாவின் போது திருபுவனம் குரு ஆத்மநாதன் அவர்களால் கானடா ராகத்திலும் ஆதி தாளத்தில் இசைக்கப்பட்டமை சமகால இசைத்துறையில் கூட சிலப்பதிகாரப் பாடல்கள் செல்வாக்குச் செலுத்திவருவதை அறியத்தருகின்றது.

'அவிப்பலி' எனும் தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ள "சுடரொரு திரிதகு" எனத் தொடங்கும் மூன்று பாடல்கள் சந்த நயத்தால் சிறப்புப் பெற்றவை. இப்பாடலில் சந்த அமைப்பு வருமாறு,

"தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனனா..."

இப்பாடலில் நான்காம் அடிதோறும் காணப்படும் "விலையே" எனும் சொல்லும் இரண்டாம் அடிதோறும் காணப்படும் 'அடிதொழுதோம்' என்ற தொடரும் பிற்காலத்தில் திருப்புகழில் 'தொங்கல்' எனும் அமைப்பு ஏற்படக் காரணமாயிற்று என்று கூறலாம் என்கிறார் அங்கயற்கண்ணி .(அங்கயற்கண்ணி.இ, 1994, பக். 91).

இப்பாடல்கள் திருஞான சம்பந்தர் அருளிய "பிடியதனுருவுமை கொளமிகு" என்று வரும் திருப்பதிக யாப்பிற்கும் 'கைத்தல நிறைகனி' என்பது போன்ற திருப்புகழ் பாடல்களுக்கும் மூல இலக்கியங்களாக அமைந்துள்ளதாக "இசைத்தமிழ்" எனும் நூலில் செற்றை வாரணனார் குறிப்பிடுவதாக முனைவர் அங்கயற்கண்ணி அவர்கள் தனது 'சிலப்பதிகார இசை' எனும் நூலில் கூறுகின்றார். (அங்கயற்கண்ணி.இ, 1994, பக். 91)

மேலும் 'பலிகொடை' எனும் தலைப்பில்,

"வம்பலர்பல்கி...."
"துண்ணென்றுடியொடு...."
"பொருள் கொண்டு" எனத் தொடங்கும் மூன்று பாடல்களுண்டு.

இனிய சந்த ஓசையுடன் ஓதுவது போன்ற அமைப்பில் இப்பாடல்கள் திகழ்வது குறிப்பிடத்தக்கது. "அயிகிரி நந்தினி நந்தித மேதினி" எனத் தொடங்கும் மஹிசாசுர மர்த்தினி தோத்திரத்தை இப் பாடலோடு ஒப்பிடத்தக்க வகையில் இவ்வமைப்பு உள்ளது.

எனவே வேட்டுவரிப் பாடல்கள் திருப்புகழ் சந்த அமைப்பிலும் தோத்திரப் பாடமைப்பிலும் கீர்த்தனை அமைப்பிலும் போற்றி வணக்கத்துக்குரிய பாடல்களாகவும் நிகழும் பேற்றினை அறிய முடிகின்றது.

சிலப்பதிகாரப் பாடல்களை ஆராய்ச்சி செய்த முனைவர் இ.அங்கயற்கண்ணி அவர்கள் சிலப்பதிகாரப் பாடல்களைப் பொதுவாக இரு வகையில் அடக்குகின்றார்.

1. தனியிசைப் பாடல்கள் (சோலோ)
2. குழு இசைப் பாடல்கள் (கோரஸ்)

கானல்வரி, வாழ்த்துக்காதை என்பவை தனியிசைப் பாடல்களாயும் குன்றக்குரவை வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை போன்றவை குழு இசைப்பாடல்களாகவும் இடம்பெற்றுள்ளன. பிற்காலத்தில் திரைப்படங்களிலும் இசைநிகழ்ச்சிகளிலும் தனியிசைப் பாடல்களும் இருவர் பாடும் பாடல்களும் அவற்றிற்கு பின்னணியாக கோரஸ் குழுவும் பாடும் முறைகளுக்கு சிலப்பதிகாரப் பாடல்களும் அவற்றின் அமைப்பு முறைகளும் ஆதாரமாக அமைந்திருக்கக்கூடும்.

**முடிவுரை**

சிலப்பதிகாரப் பாடல்களின்மூல இசை வடிவங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இருந்தும் முன்னர் குறிப்பிட்ட பாடல்கள் அனைத்தும் அக்காலத்தில் நடைமுறையில் இருந்த இசைமுறையில் பாடப்பட்டிருக்க வேண்டும் எனவும் இந்த முறையை அனுசரித்து பிற்காலத்தில் பண் இலக்கணம், பாடல் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இன்று இப்பாடல்களுக்கு இசையமைக்கும் முயற்சிகளும் அவைகளை வெளிப்படுத்தும் முறையில் இசையரங்குகளில் பாடும் முறையும், திரைப்படங்களுக்காக இசைக்கலைஞர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பணியும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற வேளையில் சிலப்பதிகாரப் பாடல்கள் தொன்மையான இசைமரபின் இலக்கிய ஆதாரங்களாகக் கருதக் கூடுபவையாக இருப்பினும் பாடல்களின் இசை அமைப்புக்களை பண்டைய பண்களில் மட்டும் அடக்கிவிடாமல் நடைமுறை இராகங்களிலும், புதிய இராகங்களிலும் இவை சேர்க்கப்பட வேண்டும் என்பது முக்கியமாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. அங்கயற்கண்ணி . இ, (1994). சிலப்பதிகாரத்தில் இசை. சென்னை பல்கலைக்கழக வெளியீடு.
2. புலியூர்கேசியன், (2000). சிலப்பதிகாரம். சென்னை பாரி நிலையம்.
3. வரதராஜன்.மு, (2000). இளங்கோவடிகள். சென்னை பாரி நிலையம்.
4. சிவத்தம்பி. கா, (2005). பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம். சென்னை
   குமரன் புத்தக இல்லம்.
5. மௌனகுரு. சி, (2006). பண்டைத்தமிழர் வரலாறும் இலக்கியமும். சென்னை அலைகள் வெளியீடு.
6. கைலாசபதி. க, (1999). பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும். சென்னை குமரன் பதிப்பகம்.
7. சுபாசினி பத்மநாதன், (1993). நாட்டியக்கலை. விமலோதயா நாட்டியப்பள்ளி தெகிவளை.
8. நாராயணவேலுப்பிள்ளை, (1998). ஐம்பெரும் காப்பியங்கள். நர்மதா வெளியீடு.
9. இராமனாதன். எஸ், (1968). சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள். கலைமகள் இசைக்கல்லூரி.